### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பிறந்த நாள் இந்நாள்!

# திராவிடக் கொள்கையின் மூலவித்தான திராவிடத்தை இந்தியாவெங்கும் கொண்டு செல்வோம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூன் 5 - முத்தமிழறிஞர் 'மானமிகு சுயமரியாதைக்காரரான கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாளில் திராவிடக் கொள்கையின் மூலவித்தான திராவிடத்தை இந்தியா எங்கும் கொண்டு செல்ல சூளுரைப்போம் இது உறுதி! உறுதி! என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

ஒரு நூற்றாண்டுக்கு முன்பே இலட்சிய வேர்ப் பலாவாகப் பழுத்த இயக்கம் திராவிடர் இயக்கம்.

**அடிமை விலங்குகளை உடைத்தெறியும் சம்மட்டியாகப் பிறந்தது.**

அரசியல், சமூக, பண்பாட்டு அடிமைகளாக பன்னூறு ஆண்டுகள் அவதிப்பட்ட உழைக்கும் மக்களின் உரிமைக் குரலாய், அடிமை விலங்குகளை உடைத்தெறியும் சம்மட்டியாகப் பிறந்தது.

அடித்தட்டு மக்களைக் கைதூக்கிவிட, படித்தவர்களாகவும், பணக்காரர்களாகவும் இருந்த திராவிடர்களே முன்வந்து மனிதநேயத்துடன் களங் கண்டார்கள்.

அத்தகையவர்களால் தான் கண்டெடுக்கப்பட்ட இயக்கம் இவ்வியக்கம் ஓர் அதிசய இயக்கம்.

மனிதமும், ஒத்தறிவும் (எம்பதி) உள்ள ஒரு புதிய தோர் சமத்துவ, சமுதாய இயக்கத்தைக் கண்டதோடு, களமாடச் செய்து அரசியலில் கணக்குத் திறந்த இயக்கம் இந்த வரலாற்றுப் பாரம்பரியமிக்க திராவிடர் இயக்கம்.

**புத்தாக்க போராளி இயக்கமாக திராவிடர் கழகம் கண்டார்**

சமூகநீதிக்கென சமர்க்களம் அமைத்த அந்த இயக்கத்தில் முன்னோடி மூத்த தலைவர்களான சர்.பிட்டி தியாகராயர், டாக்டர் டி.எம்.நாயர், டாக்டர் சி. நடேசனார் அரசியல் களத்தில் அவ்வியக்கத்தில் சேர்ந்து தொடக்கத்தில் பங்கேற்க இயலாவிட்டாலும், அதன் இலட்சியத்திற்காகவே அரசியல் கட்சிப் பிரவேசம் செய்து, உழைத்து, தான் எதிர்பார்த்த கொள்கை ஈடேற முடியாத நிலையில், அக்கால காங்கிரசை விட்டு வெளியேறி, சுயமரியாதை இயக்கம் கண்டு, நீதிக்கட்சியான திராவிடர் இயக்கத்தின் தீவிர செயல் வீரராக இருந்தார் பிற்காலத்தில் அதன் தலைவரான தந்தை பெரியார் அவர்கள். அதன் அரசியல் தோல்விக் களத்தையே, சமூகநீதி போர்க் களமாக மாற்றி, புதியதோர் அணுகுமுறையினால் புத்தாக்க போராளி இயக்கமாக திராவிடர் கழகம் கண்டார்.

**இயக்கத்தை இளைஞர்களின் பாசறையாக்கினார் தந்தை பெரியார்!**

தந்தை பெரியார் அவர்களின் இந்த அரிய பணியில் அந்நாளைய தளபதி அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி போன்றவர்களும், எம்.ஏ., படித்த அண்ணாவும் வந்து சேர்ந்தனர்; இயக்கத்தை இளைஞர்களின் பாசறையாக்கினார் தந்தை பெரியார்.

பெரியாரின் கொள்கை முழக்கப் பரப்புரைகளால் சாமானிய மக்களின் இயக்கமாக வலிவுடனும், பொலிவுடனும் வளர்ந்தது. தந்தை பெரியாருக்குத் தோள் கொடுப்போர் அணிவகுத்தனர் தொடர்ந்தனர்.

அந்த வரிசையில், பேராசிரியர் க.அன்பழகன், நாவலர் இரா.நெடுஞ்செழியன், டார்பிடோ ஏ.பி. ஜனார்த்தனம் போன்ற பட்டதாரி வாலிபர்களின் 'கொள்கை வசந்த மண்டபமாக' திராவிடர் இயக்கம் மிளிர்ந்தது.

**அவருக்கென ஒரு தனி இடம் பெற்றார்!**

நமது நூற்றாண்டு விழா நாயகர் ஒப்பற்ற கலைஞர் அவர்கள் தனது பல்கலை பன்முக ஆற்றலால் ஒப்பு வமை இல்லா உன்னத ஓய்வறியா உழைப்பினால் அவருக்கென ஒரு தனி இடம் பெற்றார் என்பது தான் வரலாறு.

முதலமைச்சராக, அண்ணாவுக்குப் பிறகு அவர் தலைமை ஏற்கத் தக்க வகையில், அவரை அடையாளம் கண்டு ஆணையிட்டார் தந்தை பெரியார். முதலமைச்சர் அறிஞர் அண்ணா, "தன்னால் எழுதப்படும் இந்த வரலாற்றின் அடுத்த பகுதியை என் தம்பி கருணாநிதி தொடருவார்; செவ்வனே செய்வார்" என்று மன்னார்குடி பொதுக்கூட்டத்திலேயே தொலைநோக்கோடு சொன்னதுண்டே!

அய்யாவின் தொலைநோக்கு துல்லியமானதாகவே இருந்தது; ஆளுமைமிக்கவர் கலைஞர் என்பதைப் பிரகடனப் படுத்தியது.

**பல பரிமாணங்களின் தொகுப்பே கலைஞர்!**

பரப்புரை பணியானாலும், எழுத்துலகத் தொண்டானாலும், கலைத்துறை மூலமும் கழகமே மூச்சாகக் கொண்டு செயலாற்றினார்.

இடையறாத போராட்டக் களப் போராளி எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர், முதலமைச்சர் என்று பல பரிமாணங்களின் தொகுப்பே 'கலைஞர்.' எல்லாவற்றிலும் ஈடற்ற, முத்திரைப் பதித்த, இணையற்ற உழைப்பால் உயர்ந்தார்.

'திராவிட மாடல்' ஆட்சியின் தொடர்ச்சி எந்த சங்கிலியும் இற்றுப் போகாமல், வலிமையுடன் தொடர்ந்து இன்றும் வரலாறு படைக்கிறது. சிறைக்கஞ்சா சிங்கமாகவும், களப் போராளியாகவும் எப்போதும் 'மானமிகு சுயமரியாதைக்காரன்' என்பதில் மாற்றுக் குறையாத கொள்கைத் தங்கமாக இன்றும் என்றும் ஜொலிக்கிறார். முதலமைச்சராக இருந்த அண்ணா, "இந்த ஆட்சியே பெரியாருக்குக் காணிக்கை!" என்றார்.

**உண்மையான திராவிட இயக்கக் கலைஞராக செம்மாந்து நிற்கிறார்.**

அண்ணாவின் அருமைத் தம்பியாகிய மானமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சர் என்ற நிலையில், "தந்தை பெரியார் அவர்களுடைய மொழியில் கூறுகிறேன். இந்த அரசு நாலாந்தர அரசு தான். பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திரன் என்ற முறையில் நாலாந்தர மக்களின் நலனுக்காகவே ஆட்சி நடத்துகிறோம்!" என்று சட்டப்பேரவையில் பிரகடனம் செய்தாரே (28.7.1971) அங்கே தான் உண்மையான திராவிட இயக்கக் கலைஞராக செம்மாந்து நிற்கிறார்.

அந்த வழியில்தான் தளபதி மாண்புமிகு மானமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமூகநீதிக்கான சரித்திர நாயகராக தனித்த நிலையில் மேலும் ஜொலிக்கிறார்.

**மானமிகு கலைஞரின் நூற்றாண்டு நாளில் உறுதி ஏற்போம்!**

இன்றைய இந்திய அரசியலுக்கே பாசிசத்தை வீழ்த்த தந்தை பெரியாரின் மூலக்கருத்தான திராவிடம் தேவைப்படுகிறது. திராவிடம் என்பது அனைவருக்கும் அனைத்தும் என்ற சமூகநீதியை அடிப்படையாகக் கொண்டது.

திராவிடம் எப்பொழுதும் காலாவதியாகாது; காலாவதியாகிக் கொண்டு வருவது சனாதனமே! காரணம், திராவிடம் 'மனித'த்தையே அடிப்படையாகக் கொண்டது.

திராவிடக் கொள்கையின் மூலவித்தான திராவிடத்தை இந்தியா எங்கும் கொண்டு செல்ல முத்தமிழறிஞர் மானமிகு கலைஞரின் நூற்றாண்டு நாளில் அதனை மேலும் மேன்மைப்படுத்த உறுதி ஏற்போம்.

வாழ்க கலைஞர்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (4.6.2023) சென்னை, டாக்டர் எம்.ஜி.ஆர் மத்திய இரயில் நிலையத்தில், சிறப்பு இரயில் மூலம் சென்னைக்கு வந்த ஒடிசா இரயில் விபத்தில் பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு தேவையான மருத்துவ முதல் உதவி அளித்து, தேவைப்படுகிறவர்களுக்கு ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைத்தனர். உடன் வருவாய் நிர்வாக ஆணையர், கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே. பிரபாகர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின் - எஸ்.எஸ்.சிவசங்கர் உள்ளிட்ட மீட்புக் குழுவினர் நடவடிக்கை!

### சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் 30 பேர் கொண்ட மருத்துவக் குழு:

# ஒடிசாவிலிருந்து சிறப்பு இரயில் மூலம் 137 பயணிகள் சென்னை வருகை!

## அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் - மா.சுப்பிரமணியன் வரவேற்றனர்!

சென்னை, ஜூன் 5- ஒடிசா மாநிலம், பாலசோரில் ஏற்பட்ட பெரும் இரயில் விபத்தில் காயமடைந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளுக்குத் தேவையான மருத்துவம் மற்றும் இதர உதவிகளைச் செய்திடவும், உயிரிழந்தவர்களைக் கண்டறிந்து அவர்கள் குடும்பத்தினருக்கு உதவிடவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், மீட்புக் குழு அமைக்கப்பட்டது.

இக்குழுவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, ஆகியோர் விபத்து நடந்த பாலசோர் என்ற இடத்தில் நடந்து வரும் மீட்புப் பணிகளைக் கவனித்து வருகின்றனர். மற்றொரு குழுவான வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், ஆசிரியர் தேர்வாணையக் குழுவின் தலைவர் திருமதி அர்ச்சனா பட்நாயக், ஆகியோர் ஒடிசாவில் இதற்கென பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையில், இரயில் விபத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் விபரங்களை சேகரித்தும், மீட்புப் பணிகளுக்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்தியும் வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று அதிகாலை 4.30 மணியளவில் ஒடிசாவிலிருந்து சிறப்பு இரயில் மூலம் 137 பயணிகள் சென்னை வருகை தந்தனர். இவர்களை இரயில் நிலையத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், வருவாய் நிர்வாக ஆணையர், கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஆகியோர் வரவேற்றனர். நேற்று காலை வருகை தந்த பயணிகளுக்கு காலை சிற்றுண்டியும் வழங்கப்பட்டது.

இவர்களில் 36 பயணிகளுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. 34 பயணிகள் இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப் பட்டனர். அனுப்பி வைக்கப்பட்ட இவர்களில் 3 பயணிகள் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்ற பயணிகள் சிறு சிகிச்சைக்குப் பிறகு அவர்களது இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையில், ஒடிசா மாநிலத்திலிருந்து சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு வந்தடைகின்ற பயணிகளுக்கு தேவையான பரிசோதனை மற்றும் மேல் சிகிச்சை மேற்கொள்ள 30 மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இவர்களுக்குத் தேவையான போக்குவரத்து வசதிக்கென அரசு போக்குவரத்துக் கழகம் மூலம் 7 பேருந்துகளும், காவல் துறை மூலம் 50 டாக்ஸிகளும் ஏற்பாடு செய்யப் பட்டு தயார் நிலையில் உள்ளது. கூடுதலாக 10 அவசர கால ஊர்தியும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இரயில் நிலையத்தில் வீல் சேர், ஸ்டிரெச்சர் வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வருவாய்த் துறை, சுகாதாரத் துறை அலுவலர்கள், வருகின்ற பயணிகளுக்குத் தேவையான உதவிகள் செய்திட பணியமர்த்தப் பட்டுள்ளனர்.

### காவியத் தலைவர் கலைஞருக்கு நூற்றாண்டு விழா !

# காலமும் மறக்காது! தமிழ்கூறும் நல்லுலகும் மறக்காது;

## தினத்தந்தி தலையங்கத்தில் புகழாரம்!

சென்னை, ஜூன் 5 - காவியத்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞருக்கு நூற்றாண்டு விழா: அதை காலமும் மறக்காது; தமிழ்க்கூறும் நல்லுலகமும் மறக்காது என்று தினத்தந்தி நாளேடு தனது தலையங்கத்தில் புகழாரம் சூட்டியுள்ளது.

அது வருமாறு:-

63 ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த 'மன்னாதி மன்னன்' திரைப்படத்தில், எம்.ஜி.ஆர். சாரட் வண்டியில் ஏறி, "அச்சம் என்பது மடமையடா.." என்ற பாடலை பாடிக் கொண்டு வருவதுபோல, ஒரு காட்சி வரும். கவிஞர் கண்ணதாசன் எழுதிய இந்த பாடலில் கடைசியாக, "வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்களின் மனதில் நிற்பவர் யார்?. மாபெரும் வீரர், மானம் காப்போர், சரித்திரம் தன்னிலே நிற்கின்றார்" என்று வரிகள் வரும். அந்த பாடலுக்கேற்ப மக்களின் மனதில் நிற்பவரும், சரித்திரம் தன்னிலே நிற்பவருமான கலைஞர் கருணாநிதியின் நூற்றாண்டு இன்று தொடங்குகிறது.



தலையங்கம்
தினத்தந்தி
3.6.2023 (சனிக்கிழமை)
காவிய தலைவருக்கு நூற்றாண்டு விழா!

இந்த நூற்றாண்டு மட்டுமல்ல, இனி எத்தனை நூற்றாண்டுகளானாலும் அவரை தமிழகம் மறக்காது. 94 வயது வரை வாழ்ந்த அவர், தன் வாழ்நாள் முழுவதும், தமிழே தன் உயிராக, தமிழின நலமே தன் உணர்வாக, தமிழ்நாட்டின் வளர்ச்சியே தன்னுடைய வாழ்நாள் செயல் திட்டமாக கொண்டு வாழ்ந்தவர். அவருடைய கொள்கை பிடிப்புக்கு, மறைந்த அண்ணா ஒருமுறை கூறியதே சான்றாகும்.

"தண்டவாளத்தில் தலைவைத்து படு என்றாலும், மந்திரி பதவியை ஏற்றுக்கொள் என்றாலும் இரண்டையும் ஒன்றாக கருதுபவன் என் தம்பி கருணாநிதி" என்றார், அண்ணா. அதுபோல தி.மு.க. தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைப்பதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பே, தஞ்சாவூரில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் அவர் பேசியபோது, "வரலாற்றின் முற்பகுதியை நான் எழுதி விட்டேன். பிற்பகுதியை என் தம்பி கருணாநிதி எழுதுவார்" என்று சொல்லிவிட்டு புறப்பட்டு சென்றார். அவர் அன்று சொன்னதுபோலவே, அண்ணா மறைவுக்கு பிறகு முதல்அமைச்சர் பொறுப்பையேற்ற கலைஞர் கருணாநிதி, 5 முறை முதல் அமைச்சர் பொறுப்பை மட்டுமல்லாமல், கட்சி தலைமை பொறுப்பையும் ஏற்று திறம்பட, சரித்திரம் மறக்காத அளவுக்கு சாதனை படைத்துவிட்டு சென்று விட்டார்.


தான் போட்டியிட்ட 13 சட்டமன்ற தேர்தலிலும் வெற்றி பெற்றதோடு மட்டுமல்லாமல், ஒரு முறை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பொறுப்பு வகித்துள்ளார். திராவிட இயக்கத்தின் நூற்றாண்டு வரலாற்றில், 75 ஆண்டுகள் கலைஞர் கருணாநிதியின் பங்களிப்பு இருக்கிறது. தனது 14 வயதிலேயே திருவாரூர் வீதிகளில் தோளில் தமிழ்க்கொடியை ஏந்திக்கொண்டு, "ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள், நீ தேடி வந்த கோழை நாடு இது வல்லவே.." என்று தன் தமிழ்ப்பற்றை பறை சாற்றினார்.

அப்போதே, பொது வாழ்க்கையில் காலடி எடுத்து வைத்த கலைஞர் 80 ஆண்டுகால பொது வாழ்க்கைக்கு சொந்தக்காரர். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் எந்த பிரச்சினையிலும், "கலைஞரின் கருத்து என்ன?" என்று அனைத்து அரசியல் கட்சிக்காரர்களையும் கேட்க வைத்தவர்.

நவீன தமிழ்நாட்டை உருவாக்கியதில், அவரது பொறுப்பு அளப்பரியது. முதல்அமைச்சராக, எதிர்க்கட்சி தலைவராக தமிழ்நாட்டின்முன்னேற்றத்துக்கு அவர் ஆற்றிய பணிகளை அடுக்கிக்கொண்டே போகலாம் என்றாலும், தந்தை பெரியாரின் கனவை நிறைவேற்றும் வகையில், மகளிருக்கு சொத்தில் சம உரிமை சட்டம், அரசு வேலை வாய்ப்பில், உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு இடஒதுக்கீடு கொண்டு வந்து, தாய்க்குலத்தின் ஏற்றத்துக்கு ஏணியாக இருந்தவர்.

அனைத்து தரப்பு தமிழ் மக்களின் உயர்வுக்கும் வழிவகுத்து, தான் தடம் பதித்த எல்லா துறைகளிலும் முத்திரை பதித்த கலைஞர் கருணாநிதி ஒரு காவிய தலைவர், அவரை காலம் மறக்காது, தமிழ்கூறும் நல்லுலகும் மறக்காது.

இவ்வாறு தினத்தந்தி நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.



சிவகங்கை மாவட்டம் – சாக்கோட்டை மேற்கு ஒன்றியம் – வ.சூரக்குடி கிளைக் கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, கழக வர்த்தகர் அணி மாநில துணைச் செயலாளர் சூரக்குடி டி.ஆர்.முத்துசாமி அவர்கள் கழகக் கொடியேற்றி வைத்தார். மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் சூரக்குடி எஸ்.மணிமேகலை முன்னிலையிலும் சாக்கோட்டை மேற்கு ஒன்றிய அவைத்தலைவர் சூரக்குடி பழனியப்பன் வரவேற்பிலும் நடந்த இந்நிகழ்ச்சியில் அனைவருக்கும் இனிப்பு வழங்கினர். சூரக்குடி கிளைக்கழகப் பிரதிநிதி ஏ. ஆர். கண்ணன், நெற்புகப்பட்டி கிளைச் செயலாளர் ஆர்.பழனியப்பன் மற்றும் கழக உறுப்பினர்கள், பொதுமக்கள் இதில் கலந்துகொண்டனர்.

### ஒடிசா ரயில் விபத்து : ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில்

# விசாரணைக்கு உத்தரவிடவேண்டும்!

## உச்சநீதிமன்றத்தில் பொது நல வழக்கு!

புதுடெல்லி, ஜூன் 5 - ஒடிசா ரயில் விபத்து குறித்து, ஒய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசார ணைக்கு உத்தரவிடக் கோரி, உச்சநீதிமன்றத்தில் பொது நலவழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாட்டையே உலுக்கிய ஒடிசா ரயில் விபத்தில் 294க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்த விபத்துக்கு தொழில்நுட்ப கோளாறே காரணம் என, ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ஒடிசா ரயில் விபத்து தொடர்பாக, ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணைக்கு உத்தரவிடக் கோரி உச்சநீதிமன்றத்தில் பொது நல வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. உச்சநீதிமன்ற வழக்கறிஞர் விஷால் இவாரி என்பவர் தாக்கல் செய்த மனுவில், ரயில் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய தானியங்கி நவீன சிக்னல் கருவிகளை நிறுவ ஒன்றிய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்றும் கூறப்பட்டு ள்ளது.



2 மாதத்தில் விசாரணை அறிக்கை தாக்கல் செய்யும் வகையில் உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் எதிர்காலத்தில் இது போன்ற விபத்துகள் ஏற்படாமல் இருக்கவும் உரிய பரிந்துரைகளை வகுத்து ஒன்றிய அரசுக்கு உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டுள்ளது. இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் விரைவில் விசாரணைக்கு வருகிறது.

# சோமாலியாவில் தாக்குதலில் 54 உகாண்டா ராணுவ வீரர்கள் பலி!

உகாண்டா, ஜூன் 5 - சோமாலியாவில் அல்ஷபாப் பயங்கரவாத அமைப்பினர் அரசுக்கு எதிராக அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகிறார்கள். அவர்களை ஒடுக்க ராணுவம் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

மேலும் உகாண்டா நாட்டை சேர்ந்த அமைதி படையும் சோமாலியாவில் தீவிர வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்நிலையில் சோமாலியா தலைநகர் மொகடிஷுவில் இருந்து தென் மேற்கே 130 கி.மீ. தொலைவில் உள்ள புலமாரரில் உள்ள பாதுகாப்பு படை தளத்தை குறி வைத்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

இதையடுத்து ராணுவத்தினரும் எதிர் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 54 உகாண்டா வீரர்கள் பலியானார்கள்.

இது தொடர்பாக உகாண்டா அதிபர் யோவேரி முசெவேனி கூறும்போது, சோமாலியாவில் உள்ள ராணுவ தளத்தில் அல்ஷபாப் தீவிர வாதிகள் நடத்திய தாக்குதலில் 54 உகாண்டா அமைதிப் படை வீரர்கள் உயிரிழந்தனர்.



தேனி தெற்கு மாவட்டம் கம்பத்தில் விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பாக தென் மண்டல இறகு பந்து போட்டி கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் இறகுபந்து போட்டியை தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. மற்றும் ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் ஆகியோர் துவக்கி வைத்தனர். உடன் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வசந்தன் ராமகிருஷ்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.